
பாடம் -07

# ஏன் இந்த கண்ணீர் ?









Bible Research and Study Centre

# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

# ஏன் இந்த கண்ணீர்



கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பான சகோதர சகோதரிகளே,

இம்முறை மேற்கண்ட தலைப்பின்கீழ் சத்தியத்தை ஆராய்வோம்.

ஏன் தேவன் தீமையை அனுமதிக்கிறார்?








⇨ அன்பின் சொரூபியான தேவன் ஏன் இவ்வுலகில் வலி, வேதனை, போர்கள், அழிவுகள், பஞ்சங்கள், அநீதி, கலவரங்கள், தீவிரவாதம், வேறுவேறு வகையான வியாதிகள், விபத்துக்கள், அகால மரணங்கள், இன்னும் பலவற்றைப் பார்த்துக்கொண்டு ஏன் அமைதியாக இருக்கிறார்?

⇨ அநேகர் இன்று தங்கள் வாழ்க்கையில் ஏதேனும் ஒரு கட்டத்தில் பாதிக்கப்படும்போது இக்கேள்வி அவர்கள் உள்ளத்தில் வருகிறது.

⇨ இன்றும் அநேகர் நாம் கடவுளை கேள்வி கேட்கக்கூடாது என்றும், ஊழியக்காரரை கேள்வி கேட்கக்கூடாது என்றும் கூறிவிடுவர்.

⇨ ஆனால் அநேக ஜனங்களுக்கு இக்கேள்விக்கான சரியான பதில் கிடைக்காததால் கடவுளே இல்லை என்ற முடிவுக்கு வந்துவிடுகின்றனர். சிலர் இக்கேள்வியினை மனதில் வைத்து புதைத்துவிடுகின்றனர். சிலர் இதுபற்றி கவலைப்படாமல், மனம்போன போக்கில் தங்களுக்கு கடவுள்களை ஏற்படுத்திக்கொண்டு அவைகளை நம்பி வாழ்கின்றனர்.

⇨ தேவ மனிதர்களும் தீர்க்கதரிசிகளும்கூட , தேவன் தீமையை அனுமதித்ததற்கான காரணத்தைத் தேடினார்கள்.

இதைக் குறித்து சாலமோன் ஞானி கூறும் வார்த்தைகளை கேட்போம் -

**பிரசங்கி 8:16,17**

'நான் ஞானத்தை அறியவும், மனுஷன் இரவும் பகலும் கண்ணுறக்கமில்லாமல் பூமியிலே செய்யும் வேலைகளைப் பார்க்கவும் என் மனதைச் செலுத்தினபோது, தேவன் செய்யும் சகல கிரியைகளையும் நான் கவனித்துப் பார்த்து, சூரியனுக்குக் கீழே செய்யப்படும் கிரியையை மனுஷன் கண்டுபிடிக்கக்கூடாதென்று கண்டேன். அதை அறியும்படி மனுஷன் பிரயாசப்பட்டாலும் அறியமாட்டான். அதை அறியலாம் என்று ஞானி எண்ணினாலும் அவனும் அதை அறிந்துகொள்ளமாட்டான்.

தாவீது, தேவன் உறங்கிக்கொண்டிருப்பதாக குற்றஞ்சாட்டுகிறார் -

**சங்கீதம் 44:23**

'ஆண்டவரே விழித்துக்கொள்ளும். ஏன் நித்திரை பண்ணுகிறீர்? எழுந்தருளும், எங்களை என்றைக்கும் தள்ளிவிடாதிரும்"

மேலும் இதே கேள்வியை ஆபகூக் தீர்க்கதரிசியும் கேட்டார் -

**ஆபகூக் 1:2**

'கர்த்தாவே , நான் எதுவரைக்கும் உம்மை நோக்கிக் கூப்பிடுவேன், நீர் கேளாமலிருக்கிறீரே கொடுமையினிமித்தம் நான் எதுவரைக்கும் உம்மை நோக்கிக் கூப்பிடுவேன், நீர் இரட்சியாமலிருக்கிறீரே"

**ஆபகூக் 1:13**

'தீமையை பார்க்கமாட்டாத சுத்தக் கண்ணனே, அநியாயத்தை நோக்கிக்கொண்டிருக்கமாட்டீரே, பின்னை துரோகிகளை நீர் நோக்கிக்கொண்டிருக்கிறதென்ன? துன்மார்க்கன் தன்னைப்பார்க்கிலும் நீதிமானை விழுங்கும்போது நீர் மௌனமாயிருக்கிறதென்ன?"

அது மாத்திரமல்ல, வேதத்தில் பக்தனாகிய யோபு, உத்தமனும் சன்மார்க்கனுமாயிருந்தபோதிலும், தேவன் அவர்மேல் தீமையை அனுமதித்தார் என்று பார்க்கிறோம். யோபு 1ம் அதிகாரம் முதல் 27ம் அதிகாரம் வரை தீமையின் அனுபவமும்,38முதல் 42 அதிகாரங்கள் ஆசீர்வாதத்தைத் தரும் காலத்தையும் குறிக்கிறது. அதாவது, யோபு முழு மனுக்குலத்திற்கு அடையாளமாக இருக்கிறார். ஆக 'ஏன் தேவன் தீமையை அனுமதித்தார்" என்ற அதே கேள்வி அவருடைய உள்ளத்தில் இருந்ததை அநேக வசனங்களில் பார்க்கிறோம்.

**யோபு 23:8,9**

'இதோ நான் முன்னாகப்போனாலும் அவர் இல்லை, பின்னாகப் போனாலும் அவரைக் காணேன். இடது புறத்தில் அவர் கிரியை செய்தும் அவரைக் காணேன். வலது புறத்திலும் நான் அவரைக் காணாதபடிக்கு ஒளித்திருக்கிறார்"

இன்று அநேக ஜனங்களின் கேள்விகளும் அதேபோலத்தான் உள்ளது.

ஆக, பாவியான ஜனங்களுக்கு இக்கேள்விகள் எழும்போது, மகா பரிசுத்தமான தேவனுக்கு இதுபற்றி தெரியாமல் இருக்குமா? யோசிக்கவேண்டும் அன்பானவர்களே. இதுபற்றி -

**ஏசாயா 1:18**

'வழக்காடுவோம் வாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் உரைக்கிறார்"


**ஏசாயா 41:21**

'உங்கள் வழக்கை கொண்டுவாருங்கள் . உங்கள் பலமான நியாயங்களை வெளிப்படுத்துங்கள் என்று கர்த்தர் சொல்கிறார்.

**எரேமியா 33:3**

'என்னை நோக்கிக் கூப்பிடு, அப்போது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களைஉனக்குஅறிவிப்பேன்என்றுகர்த்தர்உரைக்கிறார்"

தேவன் அவரது வார்த்தைகளின் மூலமாகவே நம்மிடம் பேசி, பதில் அளிப்பார். இதைக்குறித்து




**ஏசாயா 34:16**

' கர்த்தருடைய புஸ்தகத்திலே தேடி வாசியுங்கள். இவைகளில் ஒன்றும் குறையாது, இவைகளில் ஒன்றும் ஜோடில்லாதிராது, அவருடைய வாய் இதைச் சொல்லிற்று, அவருடைய ஆவி அவைகளைச் சேர்க்கும்"

தேவ வார்த்தைகளில் நமது கேள்விக்கான பதில் உள்ளது.

**பிரசங்கி 1:13**

'வானத்தின்கீழ் நடப்பதையெல்லாம் ஞானமாய் விசாரித்து ஆராய்ச்சி செய்கிறதற்கு என் மனதைப் பிரயோகம் பண்ணினேன். மனுபுத்திரர் இந்தக் கடுந்தொல்லையில் அடிபடும்படிக்கு தேவன் அதை அவர்களுக்கு நியமித்திருக்கிறார்"

**பிரசங்கி 3:10**

'மனுபுத்திரர் பாடுபடும்படி தேவன் அவர்களுக்கு நியமித்த தொல்லையைக் கண்டேன்"

'கடுந்தொல்லை" என்பது இன்றைய உலகத்தின் நிலைமைகளாகிய துக்கம், அநியாயம், கொலைகள், ஏமாற்றுவது, இயற்கை சீற்றங்கள், பசி, வியாதி, மரணம் ஆகியவைகளாகும்.

**8 இவைகள் கடுந்தொல்லைகள்.இதில் நாம் பாடுபடும்படி தேவன் அனுமதிக்கிறாரா?**

**8 இத்தீமையான அனுபவங்கள் மனிதனுக்கு நன்மையை வருவிக்குமா?**

ஆம். இந்த அனுபவங்கள் மூலம் நன்மையை அடையப்போகிறார்கள். ஆகவே தேவன் தீமையை அனுமதித்ததற்கு ஒரு திட்டமும் நோக்கமும் இருக்கிறது.

இப்போது நாம் பாடத்திற்குள் செல்வோம்.

பக்தனாகிய யோபின்மேல் தேவன் தீமையை வர அனுமதித்தபோது தன் எல்லா

சொத்துக்களும் குழந்தைகளும் அழிந்துபோகும் போதுகூட அதுபற்றி கவலைப்படாமல், கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார் என்று கூறினார்.

அவருடைய 3 நண்பர்கள் அவரிடம், யோபு ஏதாவது தவறு செய்திருக்கிறார். அதனால் அவருக்கு தீமை வந்ததாக கூறினர். ஆனால் அவருக்கு அவர்களுடைய விளக்கம்மேல் திருப்தியில்லாததால் தீமையின் அனுமதிக்கான காரணத்தை அறிய ஆர்வமாயிருந்தார்.

அதிகாரம் 38ல், தேவன் யோபுக்கு தன் பதிலைத் தர ஆரம்பிக்கிறார். எவ்வாறெனில்,

**யோபு 38:1**

'அப்போது கர்த்தர் பெருங்காற்றிலிருந்து யோபுக்கு உத்தரவாக"

பெருங்காற்று எனும்போது, இவ்வுலகின்மேல் வரும் 'மகா உபத்திரவக் காலத்தை" அடையாளமாக அங்கு காண்பிக்கப்பட்டுள்ளது.

**யோபு 38:4** நான் பூமியை அஸ்திபாரப்படுத்தினபோது நீ எங்கேயிருந்தாய்? நீ அறிவாளியானால் அதை அறிவி"

**யோபு 38:7** 'அப்போது விடியற்காலத்து நட்சத்திரங்கள் ஏகமாய் பாடி தேவபுத்திரர்(தேவ தூதர்) எல்லோரும் கெம்பீரித்தார்களே.

இங்கு சொல்லப்பட்ட விடியற்காலத்து நட்சத்திரங்கள் யாரெனில்,

**ஏசாயா 14:12** 'அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளியே" Ref:in English - KJV.

என சாத்தானை குறிப்பதாயும்,

**வெளிப்படுத்தல் 22:16** ல் இயேசுகிறிஸ்து தாம் ' தாவீதின் வேரும் சந்ததியும், பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரமுமாயிருக்கிறேன்"

என்று கூறியிருக்கிறார். இதுபற்றி பின்வரும் பாடங்களில் ஆராயலாம்.

இங்கு தேவன் முதலாவது பூமியின் சிருஷ்டிப்பு பற்றி ஏன் கூறுகிறார்? தேவனுடைய சிருஷ்டிப்பில் கோடானுகோடி நட்சத்திரங்களும், கிரகங்களும், பால்வெளி மண்டலங்களும், சூரியன்களும் இருக்கும்போது பூமியின் சிருஷ்டிப்பு மாத்திரம் ஏன் விசேஷமானதாக கூறுகிறார்? என்று பார்க்கவேண்டும்.

**ஏசாயா 66: 1**

'கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், வானம் எனக்குச் சிங்காசனம், பூமி எனக்குப் பாதபடி.."

பாதப்படி என்பதற்கு இரண்டு அர்த்தங்கள் உண்டு. அரசர்கள் சிம்மாசனத்தில் அமரும்போது, பாதங்களை வைப்பதற்கு சிறிய முக்காலி போன்ற ஆசனத்தை மெல்லிய பஞ்சினால் அலங்கரித்து வைப்பர். ஆனால் இவ்வசனத்தின் பொருள் இதுவல்ல. மற்றொரு பொருளான, கற்றுக்கொள்ளும் இடம் என்பதே சரியான பொருளாகும். பவுல் அப்போஸ்தலன் கூறுகையில்,

**அப்போஸ்தலர் 22:3**

'நான் யூதன், சிலிசியா நாட்டிலுள்ள தர்சு பட்டணத்திலே பிறந்து, இந்த நகரத்திலே கமாலியேலின்பாதத்தருகே வளர்ந்து, முன்னோர்களுடைய வேதப்பிரமாணத்தின்படியே

திட்டமாய்ப் போதிக்கப்பட்டு, இன்றையதினம் நீங்களெல்லாரும் தேவனைக் குறித்து வைராக்கியமுள்ளவர்களாய் இருக்கிறதுபோல நானும் வைராக்கியமுள்ளவனாயிருந்தேன்"

அப்.பவுல் நியாயசாஸ்திரியான கமாலியேலின் பாதப்படியில் அமர்ந்து நியாயப்பிரமாணங்களைக் கற்றுக்கொண்டார்.

ஆக **'பூமி எனக்கு பாதப்படி"** எனும்போது, முழு பூமியே கற்றுக்கொள்ளுகிற ஒரு இடம்" என்று பார்க்கிறோம்.

யார், என்ன கற்றுக்கொள்ளக்கூடிய இடம்?

தேவன் மனிதனை சிருஷ்டிக்கும்போது

**ஆதியாகமம்1:27** ''தம்முடைய சாயலாகவும் ரூபத்தின்படியேயும் உண்டாக்குவோமாக"

எனும்போது தேவன் போலவே மனிதனையும் தானாக யோசித்து செயல்படும்படி சுயாதீனமாக படைத்தார்(Freedom of will or free moral agency). மாறாக, மனிதன் எப்போதும் நன்மையே செய்யும்படி படைத்திருக்கமுடியும். ஆனால் அவன் ஒரு ரோபோட்(Robot) இயந்திரம்போல் இருந்திருப்பான். அவனிடத்தில் தேவ சாயலைக் காணமுடியாது. மேலும் நன்மை தீமை அறிந்து சுயாதீனம் பயன்படுத்தி தாமாகவே நன்மையைத் தேடவேண்டும் என்பதே தேவ சித்தம்.

தம்முடைய சிருஷ்டிப்பில் உயிருள்ள அறிவுள்ள எல்லா சிருஷ்டிகளையும் (தூதர்கள் மற்றும் மனிதர்கள்) சுயாதீனமுள்ளவராக சிருஷ்டித்தார் என்று பார்க்கிறோம். ஆனால் ஏதேனில் நடந்தது என்ன? இந்த சுயாதீனம் மிகவும் எளிதாக தவறாகப் பயன்படுத்தப்பட்டு மிகப்பெரிய இழப்புக்குள் வழிநடத்திவிட்டது.

**ஆதியாகமம் 2:16,17** ல், 'நன்மை தீமை அறியத்தக்க கனி" பற்றி அநேகர் அநேக விதமான கருத்துக்களை தருகின்றனர். ஆனால் வேதத்தில் 'கனி" என்று உள்ளதே தவிர வேறு எந்தவிதமான அர்த்தமும் இருப்பதாக தெரிவதில்லை. ஏனெனில் தேவன் எவ்வித அனுபவமுமில்லாத ஆதாமிடம் மிகப்பெரிய சோதனை செய்ய வாய்ப்பில்லை. எவ்வாறு ஒரு தகப்பன் தன் பிள்ளைகள் தனக்கு கீழ்ப்படிந்திருக்க விரும்புவாரோ அதுபோல தேவனும் ஆதாமிடம் எதிர்பார்த்தார்.



தீமை இவ்வுலகில் நுழைந்தவிதம் எவ்வாறு? என்று பார்க்கும்போது தேவனுடைய சிருஷ்டிப்பில் இரு விடிவெள்ளி நட்சத்திரங்கள் (ஒருவர் இயேசு மற்றவர் லூசிபர் -பூரண அழகுள்ளவன்)மற்றும் கோடானுகோடி தேவதூதர்களை சிருஷ்டித்தார். பின் பூமியை சிருஷ்டித்து அவர்களை நன்முறையில் கவனித்துக்கொள்ள லூசிபர் என்ற மேன்மையான (பொறுப்பான) தூதனை(கேரூப்) ஏதேனில் வைத்தார்-

**எசேக்கியேல் 28:13-15**

'நீ தேவனுடைய தோட்டாகிய ஏதேனில் இருந்தவன், பத்மராகம்,புஷ்பராகம், வைரம், படிகப்பச்சை,கோமேதகம், யஸ்பி, இந்திரநீலம், மரகதம், மாணிக்கம் முதலான சகல வித இரத்தினங்களும் பொன்னும் உன்னை மூடிக்கொண்டிருக்கிறது. நீ சிருஷ்டிக்கப்பட்ட நாளில் உன் மேள வாத்தியங்களும் உன் நாகசுரங்களும் உன்னிடத்தில் ஆயத்தப்பட்டிருந்தது. நீ காப்பாற்றுகிறதற்காக அபிஷேகம் பண்ணப்பட்ட கேருப். தேவனுடைய பரிசுத்த பர்வதத்தில் உன்னை வைத்தேன். அக்கினிமயமான கற்களின் நடுவே உலாவினாய்"

ஆனால் இங்கு வந்தபின் இத்தூதனின் மனதில் தன்னை தேவன் மனிதனுக்கு கீழாக வைத்துவிட்டாரே என தவறாக எண்ணி பூமியையும் அதிலுள்ள யாவற்றையும் தன் வசப்படுத்திக்கொள்ள திட்டமிட்டு, மனிதனை வஞ்சனை பண்ணத் தீர்மானம் செய்தான்-ஏசா 14:12-15. முதலில் ஆதாமிடம் வஞ்சனை செய்யாமல் ஸ்திரீயிடம் தன் வலையை விரிக்கிறான்.

ஆதியாகமம் 3:1ல் சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி, நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியைப் புசிக்கவேண்டும் என்று தேவன் சொன்னதுஉண்டோ? என்றது. ஒரு கேள்வியின் மூலம் முதன்முதலில் தீமை நுழைந்ததை கவனத்திற்கொள்க. இன்று அநேகர் பஸ் மற்றும் இரயில் பயணங்களில் நண்பர்கள் ஆக விரும்புகிறவர் முதலில் நேரம் எவ்வளவு? எங்கே போறீங்க? என ஆரம்பித்து பின் அநேகர் அநேகம் பிரச்சனைகளில் சிக்கிக்கொள்வதை இன்று நாம் கண்கூடாக காண்கிறோம். கேள்விக்குறி(?) நாம் பாம்பு வடிவத்தில்தானே போடுகிறோம்.

இக்கேள்விக்கு ஏவாள் பதில்பேச ஆரம்பித்து இருவருமே வஞ்சனையில் விழுந்ததினால் பாவம் மரணம் முழு மனுக்குலத்தையே ஆட்கொண்டது

**ரோமர் 5:12**

'இப்படியாக ஒரே மனுஷனாலே பாவமும், பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று"

**ரோமர் 6:23** 'பாவத்தின் சம்பளம் மரணம்"

ஆதியாகமம் 3:22ல் ஒரு முக்கியமான விஷயம் கவனிக்கவேண்டும். பின்பு தேவனாகிய கர்த்தர் இதோ, மனுஷன் நன்மை தீமை அறியத்தக்கவனாய் நம்மில் ஒருவரைப்போல் ஆனான். எனும்போது ஆதாமை உண்டாக்கினபோது நன்மை தீமை அறியாதவனாகவே சிருஷ்டித்தார். ஆக, மனிதன் இவ்விரு விஷயத்தில் நன்கு தேறினவனாக வரும்போது அனுபவமிக்க மனிதனாகிறான். ஆனால் இந்த அறிவைப் பெற கண்டிப்பாக ஒரு காலம் தேவைப்படுகிறது.

அநேகர் தங்களை ஞானிகளாக நினைத்துக்கொண்டு

- ⇨ **ஏன் தேவன் சாத்தானை அழித்திருக்கலாமே**
- ⇨ **நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தை ஏன் வைக்கவேண்டும்?**
- ⇨ **ஆதாம் அதை சாப்பிட முற்படும்போது தடுத்திருக்கலாமே என்றெல்லாம் கேட்கின்றனர்.**

ஆனால் தேவனுடைய திட்டத்தில் எந்தவொரு காரியமும் அவருக்குத் தெரியாமல்

நடந்துவிடுமா? எல்லாம் அவருக்குத் தெரிந்து தான் நடக்கிறது

**ஏசாயா 46:10**

‘அந்தத்திலுள்ளவைகளை ஆதிமுதற்கொண்டும், இன்னும் செய்யப்படாதவைகளைப் பூர்வமுதற்கொண்டும் அறிவிக்கிறேன். என் ஆலோசனை நிலைநிற்கும். எனக்குச் சித்தமானவைகளையெல்லாம் செய்வேன்..”

**ஆபகூக் 2:13**

‘இதோ, ஜனங்கள் அக்கினிக்கு இரையாக உழைத்து, ஜனங்கள் விருதாவாக இளைத்துப்போகிறது கர்த்தருடைய செயல்அல்லவோ?”

**அப் 15:18**

‘உலகத்தோற்றமுதல் தேவனுக்கு தன் கிரியைகளெல்லாம் தெரிந்திருக்கிறது” என வாசிக்கிறோம்.

சாத்தானை அழிக்க தேவன் முற்பட்டிருந்தாலும் அல்லது ஒரு ஆதாமை அழித்து வேறொருவரை உண்டாக்கியிருந்தாலும் ஆதாமிடத்தில் நடந்ததே அனைவரிடத்திலும் நடக்கும் என்பது பின்வரும் விளக்கங்கள் மூலம் அறியலாம். ஆக, தேவன் தன் எல்லா சிருஷ்டிகளையும் தொடர்ந்து அழிக்கும் சூழ்நிலையே ஏற்பட்டுவிடும் என பார்க்கிறோம். ஆகவே, தேவன் ஆதாம் பாவம்செய்யும்போது விட்டுவிட்டார். ஆதாம் முதல் இந்த யுகம் முடியும்வரை தீமையின் அனுமதிக் காலமாக அல்லது தீமையைப் பற்றி நன்கு அறிந்துகொள்ளும் காலமாக தேவன் விட்டுவிட்டார்.

மனிதன் நன்மை தீமை இன்னதென்று சுயமாக பகுத்தறியும் சுயாதீனம் பெற்றிருந்தான். நன்மை தீமை ஆகிய இவ்விரண்டையும் செய்வதினால் அதற்குரிய பலன்கள் உண்டு.

- **நன்மை செய்தால் சந்தோஷம் சமாதானம் நித்தியஜீவனுக்குக் கொண்டுசெல்லும்.**
- **தீமை செய்தால் வேதனைகள் மற்றும் மரணத்திற்கு வழிநடத்தும்.**

மனிதன் தன் சொந்த அறிவைப் பயன்படுத்தி சரியான வழியைத் தெரிந்துகொள்ளவேண்டும் -

**யோபு 34:4** ‘நமக்காக நியாமானதைத் தெரிந்துகொள்வோமாக. நன்மை இன்னதென்று நமக்குள்ளே அறிந்துகொள்வோமாக”

இப்படிப்பட்ட அனுபவங்களைப் பெறுவதனால் பிரயோஜனம் என்ன? என்று சிலர் கேட்கின்றனர். இங்குதான் தேவனுடைய தெய்வீக திட்டத்தைப் பற்றிய மாபெரும் சத்தியத்தை அறிகிறோம்.

மரித்த மற்றும் மரிக்கப்போகிற மனுக்குலத்தினர் யாவரும் மீண்டும் உயிர்ப்பிக்கப்படுவார்கள் என்பதே அந்த சத்தியம். சகல மனுக்குலமும் ஜீவன் பெற்று வாழக்கூடிய வாய்ப்பு, கல்வாரியில் இயேசு தந்த பலியினால் பெறப்பட்டதாகும்.

**1கொரிந்தியர் 15:22**

‘ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்”

மனிதனாகப் பிறந்த நல்லோர், தீயோர் அனைவரும் உயிரடைவார்களா? அப்.பவுல் இதை உறுதிப்படுத்தியிருக்கிறார் :

**அப்போஸ்தலர் 24:15**

‘நீதிமான்களும் அநீதிமான்களுமாகிய மரித்தோர் உயிர்த்தெழுந்திருப்பது உண்டென்று இவர்கள் தேவனிடத்தில் நம்பிக்கைகொண்டிருக்கிறதுபோல, நானும் நம்பிக்கை கொண்டிருக்கிறேன்”

இயேசுவும் இதைக் குறித்து தெளிவாக உரைத்திருக்கிறார் -

**யோவான் 5:28**

‘இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம். ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்கும் காலம் வரும்”

தேவனுடைய இராஜ்யத்தில் இயேசுவின் இரண்டாம் வருகையின்போது, அனைவரும் உயிர்த்து வருவார்கள். இந்த தீமையான ராஜ்யம் முடிவடைந்து நீதியின் ஆளுகை துவங்கும்.

நன்மை தீமை பற்றிய அறிவு ஒருவர் எவ்வாறு பெற்றுக்கொள்ளமுடியும்? இதற்கு 4 வழிமுறைகள் உள்ளன.

## வழிமுறை 1 தன்னில்தானே அறிந்துகொள்ளுதல்

எந்தவொரு அனுபவமோ, ஆலோசகர்களோ அல்லது மற்றவர்களைப் பார்த்தோ புரிந்துகொள்ளாமல், தன்னில்தானே இந்த அறிவைப் பெற்றிருத்தல். இது சர்வ வல்ல பிதாவாகிய தேவனுக்கே இது பொருந்தும்.

எவ்வாறெனில், இக்கனியை புசிக்கும்நாளிலே சாகவே சாவாய் எனும்போது, சாவைப்பற்றி தேவனுக்கு முன்பே தெரிந்திருக்கிறது. ஆனால் மனுஷனுக்கு மரணத்தை கண்களால் கண்டு புரிந்தபின்பே அதுபற்றிய அறிவு அவனுக்குள் வரும்.

மேலும் தேவன் விபசாரம், களவு, பொய்சாட்சி முதலியவற்றை செய்யவேண்டாம் எனும்போது அதனுடைய விளைவுகள் முன்பே அவருக்குத் தெரிந்திருக்கிறது. அதனாலேயே நியாயப்பிரமாணம் முன்கூட்டியே இஸ்ரயேல் ஜனங்களுக்கு அவர் தந்ததை நாம் அறிவோம்.

## வழிமுறை 2 மற்றவர்களைப் பார்த்து புரிந்துகொள்ளுதல்

இம்முறையானது மற்றவர்களுடைய அனுபவங்கள், அதன் விளைவுகளை நன்கு கூர்ந்து கவனிப்பதன்மூலம் அறிவைப் பெற்றுக்கொள்ளுதல் ஆகும். இதுவும்கூட மனிதனுக்குப் பொருந்தாது. ஆனால் இம்முறை தேவதூதர்களுக்கு மாத்திரமே பொருந்தும். பூமியில் மனிதர்களுடைய பாவம், அதன் விளைவுகள், பின் மரணம் அனைத்தும் அவர்களுக்கு நல்ல பாடமாக அமைகிறது -1பேது1:12.

**1கொரிந்தியர் 4:9** - அநேகர் ஏன் மனிதருக்கு சோதனை வைத்தார்? ஏன் தூதருக்கு சோதனை கொடுக்கப்படவில்லை என்று கேட்கின்றனர்.தூதர் மனிதரிலும் சற்று பெரியவர்களாக, ஞானத்திலும் பலத்திலும் உள்ளதால், அவர்கள் பாவம் செய்தால் உலகம் தாங்காது என தேவன் அறிந்திருந்தார். முதல் உலகத்தில் பாவம் நமக்கு ஏற்கனவே தெரிந்திருக்கிறதே. அதிலிருந்தே தூதர்கள் கண்டிப்பாக பாவம் செய்வர் என்பது நிரூபணமாகிவிட்டது. ஆகவே தேவன் மனிதருடைய அனுபவமே தூதர்களுக்கு போதுமானதாகிவிட்டது. அவர்களுக்கு இப்பூமி கற்றுக்கொள்ளுகிற

இடமாகிவிட்டது.

## 3. அறிவுரையின் மூலம்

இம்முறையானது அனுபவங்களுக்குள் செல்லாமல், செய்தி மற்றும் அறிவுரையின்மூலம் பெறப்படும் முறையாகும். இம்முறையே ஏதேனில் ஆதாமுக்குத் தரப்பட்டது. ஆனால் இம்முறை அவருக்கு பலன் தரவில்லை என்று பார்க்கிறோம். இப்போதும்கூட இம்முறை முழு அளவில் பலன் தருவதில்லை.

## 4. அனுபவம் மூலம் (By Experience)

அனுபவமே ஒரு மனிதனின் சிறந்த ஆசானாகும். ஒவ்வொரு மனிதனும் தனித்தனியாக சில அனுபவங்கள் மூலம் அறிவைப் பெற்றுக்கொள்ளும் முறையே இது. இதுதான் மிகவும் பொருத்தமான முறையாகும்.

பாவம் அதன் விளைவுகள் அதைத் தொடர்ந்து மரணம், பாவத்தின் பலவித வகைகளான போட்டி, பொறாமை, வஞ்சனை, கோபம், வெறுப்பு, பொய், விபசாரம், கொலை , களவு, இச்சை, பசி, பட்டினி, வியாதி. சமத்துவமின்மை, மரணம் இன்னும் அடுக்கிக்கொண்டே போகலாம். இவை பற்றிய விளைவுகளை மனிதன் நன்கு அறிந்துகொள்ளவேண்டுமானால், இப்பேர்ப்பட்ட சில கடினமான கசப்பான அனுபவங்கள் மூலம் செல்லவேண்டும்.

எவ்வாறு ஒரு சிறு குழந்தை நெருப்பின்மேல் ஆர்வமடையும்போது பெற்றோரே அதன் நன்மைக்காக கையைப் பிடித்து லேசாக சூடுபட வைத்தவுடன் அக்குழந்தை மீண்டும் நெருப்பிடமே செல்வதில்லை.



அதேபோல முதலில் ஆதாமிற்கு மரணம் என்றால் என்னவென்று தெரியவில்லை. தன் மகன் ஆபேல் இறந்தபோது இதுதான் மரணமா? என புரிவதற்குள் எத்தனைமுறை அவரை எழுப்பினாரோ? முகத்தில் எத்தனைமுறை தண்ணீர் அடித்தாரோ? நமக்குத் தெரியாது. ஆனால் ஆபேலின் உடலில் கெட்டவாசனை வந்தபோது, இனி எழுந்திருக்கமாட்டான் என உறுதியாகும்போது, தேவன் சொன்ன வார்த்தை 'நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்கே திரும்புவாய்" என்பது அவருடைய மனதில்வந்து தேவனுடைய வார்த்தையை மீறியதால் வந்த விளைவை எண்ணி எந்தளவு வேதனையடைந்திருப்பார் ? எத்தனைநாட்கள் அழுதிருப்பார் யோசிக்கவேண்டும் அன்பானவர்களே.

இப்போதுகூட உலகின் எல்லா மனிதரும் சில பாவங்கள் செய்து அதின் விளைவுகளை அனுபவிக்கும்போது அந்த தவறை மீண்டும் செய்யாதவகையில் தன்னைத் திருத்திக்கொள்ள வைக்கும் மகத்தான ஒரு ஆசானாயிருக்கிறதல்லவா, உதாரணமாக நம் பையிலிருந்து பணப்பையை ஒருவன் திருடிவிட்டால் நம் மனது படும் வேதனை தான் எத்தனை? அந்த அனுபவம் வாங்கும்போது மற்றவர்களின் பணத்தை நாம் எடுப்பதற்கு நம் மனது ஒத்துழைக்கிறதில்லை. அதேபோல நம்மீது யாராவது ஒருவர் தவறாக பேசியிருந்தால், அது நமக்குத் தெரியவரும்போது, நம் மனது எவ்வளவு கஷ்டப்படுகிறது. அப்போது நாம் மற்றவர்களைப் பற்றி பேசுவதை நிறுத்திக்கொள்ள உதவுகிறது.

இன்று உலகமே சுயநலமாக இல்லாமல், எல்லாரும் ஒரே மாதிரி நல் யோசனை செய்திருந்தால் எவ்வாறு இருக்கும்? என யோசித்தால் நமக்கு சந்தோஷத்தை தருகிறது. ஆனால் தேவனே இதை அனுமதிக்கிறார் என்றால் மனிதர் பலவகையில் தீமையின் அனுபவம் வாங்கும்போது, அந்த அனுபவங்களைப் பயன்படுத்தி 1000 வருட கிறிஸ்துவின் அரசாட்சியில் நன்மையையே தேடுவர். அது மாத்திரமல்ல இக்காலத்தின் எல்லா தீமை அனுபவங்களுக்கும் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் எப்போதும் நன்றியுள்ளவராவார்கள்.

**எபிரேயர் 12:11**

'எந்த சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும். ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்"

ஆக தேவனுடைய சிட்சை பெரியஅளவில் இருக்கும் எனப் பார்க்கிறோம். பாவிமனுஷரான நாமே நம் பிள்ளைகளை நல்வழிப்படுத்தி சிட்சிக்கும்போது, நமது நன்மைக்காகவே தேவன் கடந்த 6000 வருட காலமாக இவ்வுலகில் தீமையை அனுமதித்திருக்கிறார்.

**ரோமர் 8:22,20**

'ஆகையால் நமக்குத் தெரிந்திருக்கிறபடி இதுவரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவ வேதனைப்படுகிறது... அதேனென்றால் சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக்கொள்ளும் என்கிற நம்பிக்கையோடே அந்த சிருஷ்டியானது சுய இஷ்டத்தினாலே அல்ல, கீழ்ப்படுத்தினவராலேயே மாயைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது"

ஆக இத்தீமையின் அனுபவம் அனுமதிக்கப்பட்டுள்ளபோதே ஜனங்களுக்கு 'நம்பிக்கையும்" தேவன் வைத்திருக்கிறார்.

எவ்வாறெனில், ஏதேனில் ஆதாம் பாவம்செய்தபோது தாங்கள் நிர்வாணிகள் என அறிந்து தங்களுக்கு அத்தி இலைகளை உடையாக்கினார்கள். ஆனால் ஓரிரு நாட்களிலேயே அவ்விலைகள் காய்ந்து விழுந்திருக்கும் சமயத்தில்,

**ஆதியாகமம் 3:21** ல், தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கும் அவன் மனைவிக்கும் தோல் உடைகளை உண்டாக்கி, அவர்களுக்கு உடுத்தினார். தோல் உடைகள் வேண்டுமெனில் அங்கே ஒரு மிருகம் கண்டிப்பாக பலியாகி இருக்கும். தேவன் தமது திட்டத்தில் முன்கூட்டியே ஆதாமின் மீறுதலை உணர்ந்திருந்ததால் உடனடியாக அவனுடைய மீட்பின் திட்டத்தை தமது நேச குமாரன் இயேசுவின் ஈடுபலியினுள் மறைத்து வைத்திருந்தார். இதையே தேவன் அடையாளமாக அவர்களுக்கு தோல் உடைகளைத் தந்தார் என்று பார்க்கிறோம். இயேசுவின் ஈடுபலியே ஜனங்களுக்கு முக்கியமாக நம்பிக்கை தருவதாக உள்ளது - **மாற்கு 10:45, 1கொரிந்தியர் 15:21,22** .

அநேகர் அந்த பழத்தை சாப்பிட்டதில்தான் தாங்கள் உடலை மூடவேண்டும் என நினைத்ததாக எண்ணுகின்றனர். ஆனால் பொதுவாக மனிதன் ஏதாவது குற்றம்செய்து கண்டுபிடிக்கப்பட்டால் எதையாவது மூடிக்கொள்ளவேண்டும் என்ற எண்ணம் உருவாகிறது. இக்காலத்தில் அநேகம் குற்றவாளிகள் பிடிபடும்போது உடனே தங்கள் முகத்தை

மூடிக்கொள்கிறார்களே. அதுபோல ஆதாமும் ஏவாளும் தங்களை மூடிக்கொண்டனர்.

அரசாட்சியில் எல்லா ஜனங்களும் மீண்டும் உயிர்பெறும்போது இவ்வுலகில் பெற்ற தீமையான அனுபவங்களை பயன்படுத்தி நன்மை, அதாவது

'எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் தேவன் சித்தமுள்ளவராயிருக்கிறார்"

எனும்போது உண்மை தேவனுக்கு கீழ்ப்படிந்து நடக்க மனிதர்கள் தங்களை உடனடியாக தத்தம் செய்வார்கள்.

ஆக, உலகின் ஜனங்கள் அதாவது பூமியில் எத்தனைகோடிபேர் என தேவன் நிர்ணயித்திருக்கும் எண்ணிக்கை வரும்போது பூமியில் தீமையின் அனுபவம் மாறி,

ஏசாயா 60:13 ல்,'என் பாத ஸ்தானத்தை மகிமைப்படுத்துவேன்" என்றும்,

-'புருஷனை பசும்பொன்னிலும், மனுஷனை ஓப்பீரின் தங்கத்திலும் அபூருவமாக்குவேன்"

என தேவன் உரைக்கிறார்.

ஆக தேவனுடைய பாதப்படியாகிய பூமியில் ஜனங்கள் அனைவரும், பாவம், மரணம் முதலிய தீமையான அனுபவங்களை கற்றுக்கொண்டபின்பு, தேவன் இப்பூமியை சீர்படுத்துவார். இத்தீமையின் அனுபவம் 1000 வருட ஆட்சியில் பிரமிக்கத்தக்க அருமையான பலன்களையும் ஏற்படுத்தும்.

ஏசாயா 65:17 - 'இதோ, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் சிருஷ்டிக்கிறேன். முந்தினவைகள் இனி நினைக்கப்படுவதில்லை, மனதிலே தோன்றுவதுமில்லை" .

யோபு 1ம் அதிகாரம் முதல் 37வரை 6000 வருட தீமைக் காலம். இது இரவு என்றழைக்கப்படுகிறது(சங்கீதம் 30:8). 38 முதல் 42 வரை 1000 வருட அரசாட்சியில் தேவனுடைய சத்தியம் ஜனங்களுக்கு வெளிப்படுத்தப்படும் காலம். அதன் முடிவில் உலகின் ஜனங்கள் இரட்டிப்பாக ஆசீர்வாதம் பெறும் காலமாக, அதாவது நன்மை தீமை அனுபவம்பெற்று, அனுபவமிக்க சந்ததியாக இதே பூமியில் நித்திய ஜீவனோடு வாழ்வார்கள்.

ஆக மனிதருக்கு இப்பூமி பிரதானமாக கற்றுக்கொள்ளக்கூடிய இடமாயும், தூதரும் மனிதருடைய அனுபவம் பார்த்து கற்றுக்கொள்ளக்கூடிய இடமாயும் இருப்பதோடு தன் ஒரேபேறான குமாரன் நம்முடைய கர்த்தர் இயேசுவையே தேவன் இத்தீமை உலகில் சாதகமில்லாத சூழ்நிலையில் சோதனை செய்தார். ஆக, இயேசுவும் கற்றுக்கொள்ளக்கூடிய இடமாக இப்பூமி இருந்தது.

எபிரேயர் 5:8,9 - 'அவர் குமாரனாயிருந்தும் பட்ட பாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு.."

என வாசிக்கிறோம்.

**ஏசாயா 53:10** -"கர்த்தரோ அவரை நொறுக்க சித்தமாகி.." என்று வாசிக்கிறோமே. மேலும் இவ்வுலகில் இயேசு போலவே அவரை உண்மையாய் பின்பற்றி நடக்கின்ற அவருடைய பரிசுத்தவான்களும் திவ்விய சுபாவத்தை அடைய(2பேதுரு 1:4) இப்பூமியே அவர்களுக்கு

கற்றுக்கொள்ளக்கூடிய ஒரு இடமாக இருக்கிறது.

இவர்களை தேவன் பூமியில் எத்திசையிலும் எல்லா ஜாதி ஜனங்களிலிருந்தும் தெரிந்திருக்கிறார் (வெளி 5:9) இவர்களே கிறிஸ்துவின் சபை, சரீரம், மணவாட்டி ஆவர்.

ஏசாயா 55:8,9 ஆக நம்முடைய யோசனைகளும் தேவனுடைய யோசனைகளும் ஒன்றல்ல என்பது தேவன் இவ்வுலகில் தீமையை அனுமதித்ததின் நோக்கத்திலிருந்து புரிகிறது.

இராஜ்யத்தில் அனைத்து ஜனங்களையும் உயிரடையச் செய்யும்போது, பாவத்திற்கும் நன்மை, கீழ்ப்படிதல், பரிசுத்தமான எண்ணங்களுக்கும் உள்ள வித்தியாசத்தை ஜனங்கள் உணரும்போது,

வெளிப்படுத்தல் 5:13 ' வானத்திலும் பூமியிலுமிருக்கிற சிருஷ்டிகள் யாவும்.. சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதாகாலமும் உண்டாவதாக என்று சொல்லக்கேட்டேன்"

மல்கியா 2:15 'அவர் ஒருவனையல்லவா படைத்தார். ஆவி அவரிடத்தில் பரிபூரணமாக இருந்ததே . கீழ்ப்படிதலுள்ள சந்ததியைப் பெறும்படிதானே" .

ஆக ஆதாம் என்ற தனி மனிதர் தேவன் எதிர்பார்த்த சந்ததியல்ல. மாறாக நன்மை தீமை நன்கு அறிந்த கீழ்ப்படிதலுள்ள சந்ததியே. இவர்கள் 1000 வருட ஆட்சியின் முடிவிலேயே கிடைப்பர்.

**வெளிப்படுத்தல் 21:4**

"இனி மரணமுமில்லை துக்கமுமில்லை, அலறுதலுமில்லை"

**தேவன் தாமே நம் அனைவருக்கும் கிருபை செய்வாராக ஆமென்**



**தேவராஜ்யம் இப்பூமியில் ஸ்தாபிக்கப்படும்போது, மீண்டும் ஏதேன் தோட்டமாக இப்பூமி மாறும்**

**இந்த சத்தியங்களை பற்றி மேலும் அறிந்து கொள்ள தொடர்பு கொள்ளவும்:**
For Further Details Please Contact:
bibleresearchandstudy@gmail.com, victorgnanaraj01@gmail.com victor_vicky
+919443321874 https://www.facebook.com/bibleresearch/